சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன் பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
தொலைபேசி: 044-29515590

## ஆணை நாள். 06.07.2026

## முன்னிலை

### திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,
### மாநில தகவல் ஆணையர்

*****

**1.வழக்கு எண்.SA 10354/D/2024**

**2.வழக்கு எண்.CP 3667/D/2024**

திரு கா.சுரேஷ் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் கூடுதல்
நேர்முக உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தென்காசி மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன் கீழ் மனுதாரரின் மனு நாள் | 09.04.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல் முறையீட்டு மனுவின் நாள் | 24.05.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 12.08.2024 |
| பிரிவு 18(1)-ன் கீழான புகார் மனுவின் நாள் | 12.08.2024 |

******

## ஆணை

இன்று 06.07.2026 முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு கா.சுரேஷ் அவர்கள் நேரில் ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர். மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), தென்காசி மாவட்டம் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 8(2)-ன்படி பொதுத் தகவல் அலுவலர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். அவரது வருகையின்மை பதிவு செய்யப்பட்டது. பொதுத் தகவல் அலுவலர் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஆஜராக இயலாவிடில் அவருக்கு நிகரான பணிமூப்பில் உள்ள ஒரு

அலுவலரை மேலதிகாரியின் அங்கீகார கடிதம் பெற்று விசாரணைக்கு அனுப்பிவைக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாத பொதுத் தகவல் அலுவலர் மீது இவ்வாணையம் தனது கண்டனத்தை பதிவு செய்கிறது. மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலராக கூடுதல் பொறுப்பு வகிப்பதால் ஆணையத்தின் விசாரணைக்கு நேரில் ஆஜராக இயலவில்லையென்றும், பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு பா.சங்கர நாராயணன், தலைமை உதவியாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தென்காசி மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார்.

**1.வழக்கு எண்.SA 10354/D/2024 & 2.வழக்கு எண்.CP 3667/D/2024**

மனுதாரர் 09.04.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுக்களில், முதலமைச்சர் தனிப்பிரிவு மனு எண்கள்.5414285, 7940688 ஆகிய கோப்பின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம், 1.TN/REV/TKS/COLLOTH/10MAY 2023/5414285, DATE.2023/05/10, 2.TN/REV/TKS/I/PORTAL/03 APR 24/7940688 ஆகிய மனுக்களின் மீது தென்காசி மாவட்ட ஆட்சியர் அவர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் தொடர்பான தகவல்களைக் கோரி பொது தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தென்காசி மாவட்டம் அவர்களுக்கு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர், தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(1)ன் கீழான 24.05.2024 தேதியிட்ட முதல் மேல்மறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தனக்கு முழுமையான தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(3)ன் கீழான 12.08.2024 தேதியிட்ட தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினையும், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 18(1)ன் கீழான 12.08.2024 தேதியிட்ட தனது புகார் மனுவினையும் இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனு மற்றும் அப்புகார் மனுக்களின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.07.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தான் கோரிய தகவல்கள் அனைத்தும் பொதுத் தகவல் அலுவலகத்தில் இருந்தும் பொதுத் தகவல் அலுவலர் இதுநாள் வரையில், தனக்கு முழுமையான தகவல்களை வழங்காத, பொது அதிகார அமைப்புக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 20(1)இன்படி தண்டமும், பிரிவு 20(2)இன் படி துறை வாரியான நடவடிக்கை எடுக்க அரசிற்கு பரிந்துறைக்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார். மேலும் மனுதாரருக்கு கடுமையான மன உளைச்சலை ஏற்படுத்திய காரணத்தால், பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பிரிவு 19(8)(b)-இன் படி இழப்பீடு தொகை பெற்றுத் தருமாறும் ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தென்காசி மாவட்டம், தென்காசி வட்டம், மத்தளம்பாறை கிராமம், பட்டா எண்.1771 ஐ ரத்து செய்தல் தொடர்பான தகவல்களை 30 நாட்களில் வழங்காமல் சற்றேறக்குறைய 762 நாட்கள் கழித்து ந.க.எண்.COLR/5979/2026-H2, 02.07.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை இவ்வாணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க மனுதாரருக்கு முழுமையான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்தார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, ஆணையம், பொதுத் தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து, பொதுத் தகவல் அலுவலருக்கு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

- இன்றைய விசாரணையின் அழைப்பாணையினை பெற்ற பிறகும் பொதுத் தகவல் அலுவலர் விசாரணையில் ஆஜராகாமல் தனக்கு நிகரான பணியில் உள்ள அலுவலரை அனுப்பாமல், அவ்வலுவலக தலைமை உதவியாளரை அனுப்பிய திரு க.சேதுராமலிங்கம், பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தென்காசி மாவட்டம் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்திற்கு 28.07.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.
- மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் முழுமையான தகவல் வழங்காமல் இருந்த, திரு வே.செல்வகுமார், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தென்காசி மாவட்டம் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்திற்கு 28.07.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது. மேற்படி ஆணையை அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு சார்வு செய்ய தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது
- மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் தகவல் வழங்காத ஒரு பொது அதிகார அமைப்பின் மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) பொறுப்பில் இருக்கும் உயர் அதிகாரி தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 இன் படி மனுதாரரின் மனு பெறப்பட்டு 762 நாட்கள் ஆகியும் மனுதாரருக்கு இதுநாள் வரையில் முழுமையான தகவல்களை வழங்காமல் இருந்த 09.04.2024 நாளன்று பொதுத் தகவல் அலுவலராக இருந்த பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தென்காசி மாவட்டம் அவர்கள், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் படி உரிய காலத்திற்குள் தகவல் வழங்காமல் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மேல் கிஞ்சிற்றும் அக்கறை இல்லாமல், வெளிப்படைத்தன்மை மற்றும் ஊழலற்ற நிர்வாகத்திற்கு வழிவகுக்கும் இந்த சட்டத்தினை மதிக்காமல் செயல்பட்ட பொது அதிகார அமைப்பினை இவ்வாணையம் வன்மையாக கண்டிக்கிறது.
- மனுதாரர் தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005, அனுமதித்திருக்கும் 30 நாட்களில் பொதுத் தகவல் அலுவலர், தகவல் தர இயலாத சூழ்நிலைக்கு தகுந்த காரண விளக்கங்கள் (Violation of the Act) இவ்வாணையத்தின் விசாரணையில் தெரிவிக்காத காரணத்தாலும்
- பொதுத்தகவல் அலுவலர் தகவல் வழங்காமல் இருப்பதற்கு ஏற்புடைய அல்லது நியாயமற்ற தாமதத்தை (Unreasonable delay) இவ்வாணையத்தின் விசாரணையில் நிரூபிக்காத காரணத்தால்
- பொதுத்தகவல் அலுவலர் தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005 இன் கீழ் மனுதாரர் கோரிய தகவல்களுக்கு முழுமையான தகவல் வழங்காமல் தவறான மற்றும் திசைதிருப்பும் நோக்கில் தகவல் வழங்கியுள்ளதால் அல்லது (Providing False and Misleading information / Incomplete Information)

- *பொதுத்தகவல் அலுவலரால் ஏற்படுத்தப்பட்ட தேவையற்ற தொந்தரவு மற்றும் தேவையற்ற சிரமத்தினால் (Harrasment of Unnecessary inconvenience caused) மனுதாரருக்கு ஏற்பட்ட மனஉளைச்சல் மற்றும் உடல் பாதிப்பினால் தன்னுடைய குடும்பம் மற்றும் தனது வருமானம் பாதிக்கப்பட்டுள்ள காரணத்தினாலும்*
- *மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள மனஉளைச்சலை ஈடுசெய்யும் பொருட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் தகவல் வழங்காத பொது அதிகார அமைப்பு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 19(8)(b)-ன் கீழ் மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.5,000 /- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்க ஆணையம் உத்தரவிடுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை பெற்றுக்கொண்டதற்கான ஆதாரத்துடன் கூடிய அறிக்கையின் நகலினை இவ்வாணையத்திற்கு 28.07.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.*
- *மனுதாரர் 6(1) மனுவில் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கும் முழுமையான தகவல்களை உரிய ஆவண நகல்களுடன் <u>"தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 28.07.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு <u>தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு</u> இவ்வாணையம் <u>உத்தரவிடப்படுகின்றது.</u>*

**ஒம்/-(வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>1.வழக்கு எண்.SA 10354/D/2024</u>**

**<u>2.வழக்கு எண்.CP 3667/D/2024</u>**

**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் கூடுதல்
நேர்முக உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தென்காசி மாவட்டம்.

<u>**மனுதாரர்**</u>

திரு கா.சுரேஷ்,
த/பெ.திரு S.காசி நாடார்,
க.எண்.21, மணிமேகலை தெரு,
காந்தி நகர்,
அம்பத்தூர் ஓ.டி.,
சென்னை - 600 053.

***Copy to: File***
***VP / PA***